அருளிச் செயலும் அருளாளனும்

ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி மஹாமஹோபாத்யாய மஹாவித்வான்
ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.

தேவப்பெருமாளையும் திவ்ய ப்ரபந்தத்தையும் பற்றி ஒரு வியாஸம் மலரில் வெளியிட வேணுமென்று விரும்பியிருந்தார், சபையின் காரியதரிசியான ஸ்ரீமான் உ. வே. C. பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமி. தேவப் பெருமாளுடைய வைபவம் பற்றியும், அருளிச்செயல் கோஷ்டி வ்யவஹாரங்கள் பற்றியும் பல முறையும் பலபாஷைகளிலும் எழுதி வெளியிட்டிருக்கிறேன். அவற்றின் சாரமாக இக்கட்டுரையைக் கொண்மின்.

திருவல்லிக்கேணிக்கு ப்ரஹ்மோத்ஸவ ஸேவார்த்தமாகப் பலகால் (இளமைப் பருவத்தில்) விடைகொண்டதுண்டு. வேத திவ்ய ப்ரபந்த கோஷ்டியின் அநுபவம் "நெஞ்சுள்ளும் நீங்காவே." வேத வேதாந்த வர்த்தினீ ஸபைக்குப் பலகால் பரீக்ஷ்யனாகவும் பரீக்ஷகனாகவும் இருந்ததுண்டு. அக்காலத்தில் கைங்கர்ய நிரந்தரர்களாயிருந்த ஆவி. ந. ஸ்வாமி, வை.மு. கோ. ஸ்வாமி போன்ற பல பெரியோர்களுடன் நெருங்கிப்பழகியிருக்கிறேன். தற்போது ஜ்ஞான சில வயோவ்ருத்தராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமான் உ. வே. தேரூர் ஸ்ரீநிவாஸ வரதாசார்ய ஸ்வாமி பரமரஸிக்தர்.

பலகாலம் அத்யாபக ஸபையின் காரியதரிசியாக விளங்கிய ஸ்ரீமான் உ.வே. காவல் கழனி அனந்தாசார்ய ஸ்வாமி அடியேனுக்குப் பரமாப்தர். அவருக்குப் பிறகு அப்பொறுப்பை ஏற்று மிகச் சிறந்த முறையில் அதை நிறைவேற்றி வரும் அடியேன் மூலம் பலமுறை வேதவேதாந்தவர்த்தினி பரிசுகள் வாங்கின ஸ்ரீமான் உ. வே. C. பார்த்தஸாரதி ஐயங்கார் ஸ்வாமியும் மற்ற அங்கத்தினர்களும் பல ஆண்டுகள் தொண்டு பூண்ட அமுதமுண்ண அருளுமாறு அஞ்சுவையமுதம் அன்றளித்தானைத் திருவல்லிக்கேணி நின்றானை இறைஞ்சுகிறேன்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாதுமில் குரவர் தாம்வாழி—ஏழ்பாரும்
உய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம் வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

பஞ்சாயுததரனான எம்பெருமான் பஞ்ச ப்ரகார விசிஷ்டனாக சாஸ்த்ரங்களில் கூறப்படுகிறான். பரவ்யூஹவிபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரங்கள் என்னுமிவை பஞ்ச ப்ரகாரங்களென்று ப்ரஸித்தம். ப்ரமேயங்களில் தலையான எம்பெருமான் தன்னை இங்ஙனே ஐந்து வகையாக வகுத்துக் கொண்டது போல் ப்ரமாணங்களில் தலையான வேதமும் இவ்வைந்து ப்ரகாரங்களுக்குச் சேரத் தன்னையும் ஐந்தாக வகுத்துக் கொண்டது. இதனை விவரிப்போம்.

எம்பெருமான் நலமந்த மில்லதோர் நாடாம் பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் நிலை பரத்வம் எனப்படும். திருப்

பாற்கடலில் வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்களாகத் தானே வகுப்புண்டு நிற்கும் நிலை வ்யூஹம் எனப்படும். காகுத்தனாகவும், கண்ணனாகவும், கவின் மிகு குறளனாகவும்......நாட்டில் பிறந்து காத்தளித்த நிலை விபவாகாரத்துட்சேரும். கரந்தெங்கும் பரந்துளன் என்று யாவரினுள்ளும் யாவற்றினுள்ளும் பொலிந்து நிற்கும் நிலை அந்தர்யாமித்வம் எனப்படும். கோயில்களிலும் இல்லங்களிலும் தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவமாய் நிற்கும் நிலை அர்ச்சாவதாரம் எனப்படும்.

பரமனான பகவானுடைய பஞ்ச ப்ரகாரங்களைக் கண்டோம். இனி பரம ப்ரமாணமான பழமறையின் பஞ்ச ப்ரகாரங்களைக் காண்போம்.

யச்ச கிஞ்சித் ஜகத் யஸ்மிந்
த்ருச்யதே ச்ரூயதே பிவா
அந்தர் பஹிஶ்ச தத்ஸர்வம்
வ்யாப்ய நாராயண: ஸ்தித:

போன்றவற்றில் அந்தர்யாமித்வம் வேதத்தில் பேசப்பட்டுள்ளது.

பிதாபுத்ரேண பித்ருமாந் யோநி
யோநௌ
நா வேதவிந் மநுதே தம் ப்ருஹந்தம்

போன்ற பல வேதவாக்கியங்கள் எம்பெருமான் பிறந்துலகம் காத்தளிப்பதைப் பேசுகின்றன. ஆயினும் வேதம் பரத்வத்தையே பரக்கப் பேசுவதென்பதை விசதவாக் சிகாமணிகளான ஸ்ரீ மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்திகொண்டு மூதலிப்போம். ஆசார்ய ஹ்ருதய வ்யாக்யானத்தில் (சூர்ணை 70) "...க்ஷயந்த மஸ்ய ரஜஸ: பராகே' 'ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்' தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய: யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமந். ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபச்சித: இத்யாதிகளாலே பல விடங்களிலும் ஈச்வரனுடைய பராவஸ்தையை ப்ரதிபாதிக்கையாலே பரத்வத்திலே நோக்காய்" (2) அப்பெருமானுடைய வியூகநிலையில் குணம் முதலியவற்றைப் பேசுவதற்காக வேதமே ஸ்ரீ பாஞ்சராத்ரமாக வடிவெடுத்ததாகையாலே பகவானுடைய வ்யூஹாவஸ்தைக்குச் சேர்ந்த ப்ரமாணநிலை ஸ்ரீபாஞ்சராத்ரம் (3) எம்பெருமானுடைய அந்தர்யாமித்வமானது அக்னி, வருணன், இந்திரன் முதலான தேவதைகள் பக்கலுள்ளது. அவ்வே தேவதைகளைக் குறித்து நாம்செய்யும் கருமங்கள் அந்தர்யாமியான எம்பெருமானைச் சேருகின்றன என்பது வேதாந்திகளின் கொள்கை. ஆகவே எம்பெருமானுடைய அந்தர்யாமித்வம் கர்மாநுஷ்டானத்திற்கு உரியதென்று தேறிற்று. அப்படிப்பட்ட கர்மகலாபங்களை விவரிக்க மநுஸ்ம்ருதி முதலான தரும சாஸ்த்ரங்களாக அந்த வேதமே அவதரித்த படியாலே, அந்தர்யாமித்வத்திற்குச் சேர்ந்த ப்ரமாண நிலை ஸ்ம்ருதிகள். (4) அப்பெருமானுடைய ராமக்ருஷ்ணாதி விபவாவதார சேஷ்டிதங்களைப் பேசுவதற்காக அந்தவேதமே ஸ்ரீராமாயணம், மஹாபாரதம் முதலிய இதிஹாஸங்களாக ஆவிர்ப்பவித்ததாகையாலே எம்பெருமானுடைய விபவத்திற்குச் சேர்ந்த ப்ரமாண நிலை இதிஹாச புராணங்கள். (5) விபவாவதாரங்களால் ரக்ஷித்தருளுமெம்பெருமான் அவதாரத்திற்குப் பிற்பட்டவர்களும் இழவாதபடி மிகவும் ஸௌலபனாக அர்ச்சாவதாரமாய் வளவில் அதன் பலவகைப் பெருமையைப் பேசுவதற்காக அந்த வேதமே சகல ஸர்வஸௌலபமாய் ஸர்வாதிகாரமாய் குறிப்பாகத் தமிழ் வடிவாய்க்கொண்டு ஆழ்வார்கள் பக்கலிலே திருவவதரித்தாகையாலே அர்ச்சைக்குச்சேர்ந்த ப்ரமாணநிலை – திவ்யப்ரபந்தம். ஸ்ரீ ராமாயண பாராயணம் செய்பவர்கள் பாடும் "வேத வேத்யேபரே பும்ஸி ஜாதே தச...

தாத்மஜே, வேத : ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா என்கிற ச்லோகத்தை அநுஸந்தித்து வருவது நிர்விவாதம். வேத ப்ரதிபாத்யனான பரம புருஷன் சக்ரவர்த்தித் திருமகனாய் அவதரித்த அளவில் அபௌருஷேயமான வேதமும் ஸ்ரீ வால்மீகி பகவானிடத்தில் நின்றும் ஸ்ரீ ராமாயணமாகத் திருவவதரித்ததென்று இந்த ச்லோகத்தில் சொல்லப்பட்டுள்ளது: இதைக்கொண்டு நம்முடைய பூர்வாசார்யர்கள் நிர்வஹித்த கட்டளையை நாம் மேலே விவரித்தோம். ப்ராமாணிகர்கள் இதில் ஸந்தேஹிக்கவோ ஆக்ஷேபிக்கவோ இடமில்லை. பராத்பரனான எம்பெருமானுடைய பரத்வப் பெருமைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் வேதத்தைக்கொண்டு தெரிந்து கொள்ள வேண்டும். அப்பெருமானுடைய வ்யூஹாவஸ்தையில் விசேஷங்களைத் தெரிந்து கொள்ளவேண்டுமானால் பாஞ்சராத்ரத்தைக் கொண்டு தெரிந்து கொள்ளவேண்டும் விபவாவதார வ்ருத்தாந்தங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் இதிஹாச புராணங்களைக் கொண்டு தெரிந்து கொள்ளவேண்டும். அந்தர்யாம்யாராதநரூப கர்மகலாபங்களைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால் மநுஸ்ம்ருதி முதலிய தர்ம சாஸ்த்ரங்களைக்கொண்டு தெரிந்துகொள்ள வேண்டும். அர்ச்சாவதாரப் பெருமைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகளாகிய திவ்யப்ரபந்தங்களைக்கொண்டே தெரிந்து கொள்ளவேண்டும். ஆகவே திவ்ய ப்ரபந்தங்கள் அர்ச்சாவதார வேதமென்று குலாவப்பட்டு வருகின்றன. உண்மையில், ராம க்ருஷ்ணாதியவதாரங்களுக்குப் பிற்பட்டவர்களான நமக்குத் தஞ்சமான கோயில், திருமலை, பெருமாள் கோயில் முதலான திவ்ய தேசங்களின் [நூற்றெட்டுத் திருப்பதிகளின்] அநுபவம் நமக்குத் திவ்யப்ரபந்தங்களாலல்லது வேறொன்றினாலும் ஸாத்யமன்றே. ஆழ்வார்களோ திவ்ய ஸூரிகள். அவர்கள் பாடின நூல்களோ திவ்யப்ரபந்தங்கள். அப்பிரபந்தங்களுக்கு விஷயமோ திவ்ய தேசங்கள். இப்படி எல்லாம் திவ்யமாக அமைந்த அமைப்பு அற்புதமென்பதை யாரறிவார்?

ஆழ்வார் திவ்ய ப்ரபந்தம் அருளிச் செய்யாதிருந்தால் விஷ்ணுவாலயங்களில் நடைபெறும் உத்ஸவங்கள் அந்தோ! அழகிழந்து கிடக்குமே என்று கம்பர் தமது சடகோபரந்தாதியில்,

''அந்தமிலா மறையாயிரத்தாழ்ந்த
வரும்பொருளைச்
செந்தமிழாகத் திருத்திலனேல்
நிலத்தேவர்களும்
தந்தம் விழாவுமழகுமென்னும்
தமிழார்கவியின்
பந்தம் விழாவொழுகும் குருகூர்
வந்தபண்ணவனே''

என்கிற செய்யுளினால் கல்வெட்டாகக் கூறினார்.

நூற்றுக்கணக்கான திவ்ய தேசங்கள் திகழ்ந்தாலும் "கோயில் திருமலை, பெருமாள் கோயில்" என்று மூன்று திவ்ய தேசங்கள் மிக முக்யமாகக் குலாவப்படுகின்றன. ஸ்ரீரங்கம், திருவேங்கடமலை ஸ்ரீகாஞ்சி என்னுமிவையே கோயில் திருமலை, பெருமாள் கோயில் என்று ஸம்ப்ரதாய முறையில் வழங்கப்படுகின்றன.

ஸகல திவ்யதேசங்களுக்குள்ளும் இம்மூன்று திவ்ய தேசங்களுக்கு விசேஷமான ஏற்றம் எதனாலுண்டாயிற்றென்னில்: நம்மாழ்வார் தம்முடைய முதற்

ப்ரபந்தமான திருவிருத்தத்தில் இம் மூன்று திவ்ய தேசங்களை மட்டுமே மங்களாசாஸனம் செய்தருளினபடியாலே யென்று பெரியோர் கூறுவர். "பொருநீர்த் திருவரங்கா வருளாய்" (28) என்று ஸ்ரீரங்கத்தையும், "பெருமான் மலையோ திருவேங்கடமென்று கற்கின்ற வாசகமே" (60) என்று திருவேங்கட மலையையும், 'விண்ணோர் தொழுங்கண்ணன் வெ:.கா வுது" (26) என்று ஸ்ரீகாஞ்சியையும் மங்களாசாஸனம் செய்திருப்பது காணத்தக்கது. இம்மூன்று திவ்ய தேசங்கள் தவிர வேறொரு திவ்யதேசம் ப்ரதமப்ரபந்தமான திருவிருத்தத்தில் போற்றப்பட்டிலாமையினாலே ஆழ்வார் திருவுள்ளத்தினால் இம்மூன்று திவ்ய தேசங்களுக்கே முக்கியத்துவம் கொள்ளப்பட்டதென்று கொண்டு ஸ்ரீவைஷ்ணவப் பேராசிரியர்கள் இவற்றுக்கே தலைமைகொடுத்து வழங்கி வருகின்றார்கள்.

மேலே குறித்த மூன்று தலங்களுக்குள்ளும் ஸ்ரீகாஞ்சிபுரிக்கே மிகவும் ப்ராதான்யம் ப்ரஸித்தி பெற்றுள்ளது. அதற்கும் காரணம் ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியே. நம்மாழ்வார் முதற்பிரபந்தத்தின் முதற்பாட்டிலும் சரமப்ரபந்தமான திருவாய்மொழியின் முதற்பாட்டிலும் தேவப்பெருமாளையேயன்றோபோற்றியுள்ளார். திருவிருத்தத்தின் முதற்பாட்டில் "இமையோர் தலைவா! மெய்ந்நின்று கேட்டருளாய்" என்றார். தேவாதிராஜன் என்னும் திருநாமத்தையே உட்கொண்டு, இமையோர் தலைவா! என்றது; திருவாய்மொழியின் முதற்பாட்டில் "அமரர்களதிபதி" யென்றதும் தேவப்பெருமாளைத் திருவுள்ளத்திற்கொண்டே: ப்ரணதார்த்திஹரனென்ற திருநாமத்தையுட்கொண்டு "துயரறு சுடரடி" யென்றுமருளிச் செய்தது. "ப்ரதம சதகேவீக்ஷ்ய வரதம்" என்று வேதாந்தவாசிரியர் வகுத்திருப்பதும் இந்த நிர்வாஹத்தை நிலைநாட்டித் தரும்.

இத்தலத்தைப் பெருமாள் கோயிலென்று வழங்கி வருவது கொண்டும் இதன் ப்ராதான்யத்தையுணரலாம். உலகில் எல்லா திவ்ய தேசங்களுமே பெருமாள் கோயிலாயிருக்க, இதனை மட்டும் பெருமாள்கோயிலென அநாதிகாலமாக வழங்கிவருவது குறிக்கொள்ளத்தக்கது. சாரீரக மீமாம்ஸை யென்கிற ப்ரஹ்ம ஸூத்ரத்திற்குப் பல பாஷ்யங்கள் தோன்றியுள்ளன. இதர பாஷ்யங்களை சங்கர பாஷ்யமென்றும் மத்வபாஷ்யமென்றும் நீலகண்ட பாஷ்யமென்றும் சங்கரகர்த்தாக்களின் பெயரையிட்டு வ்யவஹரித்து வருகிறார்கள்.

ஸ்வாமி யருளிச்செய்த பாஷ்யத்தை மாத்திரம் ராமாநுஜ பாஷ்யமென்னமல் ஸ்ரீபாஷ்ய மென்றே உலகமெல்லாம் வழங்கி வருகின்றது. அதுபோலவேயாம் இத்தலத்தை மாத்திரம் பெருமாள் கோயிலென்பது.

இத்தலத்தெம்பெருமானுக்குத் தேவராஜன், தேவாதிராஜன் போன்ற பரத்வஸூசகமான திருநாமங்கள் பல இருந்தாலும் அருளாளன், பேரருளாளன் போன்ற திருநாமங்களே நெஞ்சை நீர்ப்பண்டமாக்குவன. ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்திகட்குத் திவ்ய ப்ரபந்தம் என்கிற திருநாமத்துடன் 'அருளிச்செயல் என்கிற வ்யபதேசம் பூர்வாசார்யர்களின் காலத்தில் ஏற்பட்டது. அருளாளன் அருளிச்செயலில் ஈடுபட்டுள்ளவாற்றை இனி விவரிக்கப் புகுகின்றேன்.

திவ்யப்ரபந்த ஸேவை தொடங்கும் போது இங்கு முதலில் திருப்பல்லாண்டு ஸேவிப்பதன் காரணத்தைப் பெரியோர் ஸாதிக்கக் கேட்டதுண்டு. அதாவது நம்மாழ்வார் ஒரு பதிகத்திற்குப் பயனுரைத்துத் தலைக்கட்டுகையில் "உருகா

திறப்பரியதேயே" என்றருளிச் செய்தார். இது ஆழ்வார்களனைவருடைய ஸ்ரீஸூக்தியின் பொதுவான தன்மையாகவே கொள்ளப்படும். இரும்புபோல் வலியநெஞ்சினரையும் உருக்கும் பெருமை வாய்ந்த அருளிச்செயல் ஸர்வபூத ஸுஹ்ருத்தான அருளாழியம்மானை உருக்காதோ? எனவே அப்பெருமான் பரிக்ரஹித்த அர்ச்சைத் திருமேனிக்குக் காப்பிடவே திருப்பல்லாண்டு தொடங்குவது என்பது ரஸவத்தரமானதே. கிருஷ்ணனுயிருந்து குழலூதுகையில் இசையில் மயங்கிய சேதநாசேதநங்களில் தானும் ஒருவனையினன் என்பதை ஸ்ரீபராசரபட்டர் தமது ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் (உத்தரசதக. 72) "த்வம் தேஷு அந்யதமோ பபூவித" என்று காட்டியருளுகிருர். குழலுக்குக் குழைந்தவன் குழலின் மலியச் சொன்ன குலவு தமிழ்ப் பாசுரங்களில் ஈடுபட்டுருகிறிற்பதில் வியப்பொன்றுமில்லை.

சாதாரணமாக திவ்ய தேசங்களில் காலைத் திருவாராதனத்தில் பெருமாள் திருப்பாவை திருச்செவி சாத்தியருளுவது வழக்கம். ஆனுல் தேவப்பெருமாள் அருளிச்செயல் முழுவதும் அடைவே (ப்ரதிதினமும் காலைத் திருவாராதனத்தில் ஐம்பது ஐம்பது பாசுரங்களாக) திருச்செவி சாத்தியருளுகிருர். இவ்வாருக வருஷத்தில் நான்கைந்து ஆவ்ருத்தி ப்ராப்தமாகும்.

ரஸிகாக்ரேஸரனை பேரருளாளன் அருளிச்செயல் கோஷ்டிக்கு ஏற்றம் அருளியுள்ளவித்தையும் சிறிது தெரிவிக்கிறேன். வைகாசி மாதத்தில் நடைபெறும் வஸந்தோத்ஸவத்தில் கோஷ்டிக்குச் சாத்துப்படியும் வஸந்தமும் விநியோகம் செய்வது வழக்கம். பெருமாள் ஸன்னிதி வீதி யெழுந்தருளித் திரும்புகையில் திருவடி ஸன்னிதி வாசலில் திவ்ய ப்ரபந்த கோஷ்டி தொடங்கும் போது தான் அவை விநியோகம் செய்வது நாளைக்கும் வழக்கம். வஸந்தோத்ஸவ தீர்த்தவாரியன்று மாடவீதிப் புறப்பாடாகையால் அருளிச்செயல் கோஷ்டி தொடக்கத்தையொட்டியே இவற்றின் விநியோகம் நிகழும். ஸ்ரீஜயந்திக்கு மறுநாள் கண்ணன் திருவீதிப் புறப்பாட்டில் எண்ணெய்க் காப்பு விநியோகமும் இயல் கோஷ்டி தொடங்கும் போதுதான் ஏற்பட்டுள்ளது.

மார்கழித் திங்களில் ஆண்டாள் உத்ஸவம் நாலு மாடவீதிப் புறப்பாடு பத்துநாளுண்டு. ஆண்டாள் தேவதேவ திவ்ய மஹிஷியான பெருமைக்குச் சேரப் பீதாம்பரத்திஞல் அவகுண்டனங் கொண்டே மாடவீதி எழுந்தருள்வது. ஸன்னிதி வீதியின் கோடியில் திருவடி ஸன்னிதி யருகில் இயல் கோஷ்டி தொடக்கம். இயல் தொடங்கும் போது "பிடாத்தை விழவிட்டு அத்யாபகர்கட்கு ஸர்வஸ்வதானம் செய்வது" என்கிற முறையிலே இயலுக்கு மரியாதையாக அவகுண்டனத்தைக் களைந்துவிடுவது என்பது ஸேவிக்கலாகும்.